5

<u>ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல்</u>

அனுப்புநர்

உறுப்பினர் செயலர்,
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
எண். 1, காந்தி இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.

பெறுநர்

சீடெக்ஸ் பெட்ரோ கெமிகல்ஸ் லிமிடெட்,
சின்ன சேக்காடு கிராமம்,
மணலி,
சென்னை – 600069

---

கடித எண். சி2/8886/2005 நாள் : /7/2007

ஐய்யா,

பொருள் : செ.பெ.வ.கு. – திட்ட அனுமதி – நில அளவை எண் 268, 269, 270, 271, 272, 273, சாத்தாங்காடு கிராமம் மற்றும் நில அளவை எண் 67/7, 8, 9, 10, 74/1, 75/4, 5, 76/1, 2, 77/1-8, 78/1-3, 79/1-9, சின்ன சேக்காடு கிராமம். கூடுதல் தொழிற்சாலை கட்டிடம் கட்டுமானம் — கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் கட்டணம் ~~சென்னை – வளர்ச்சிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள்~~ செலுத்துவது – தொடர்பாக.

DESPATCHED

பார்வை : 1. செயல் அலுவலர், சின்ன சேக்காடு சிறப்பு நிலை பேரூராட்சி கடித எண் 497/2005 நாள் 10-3-06 ~~ஆணையர், சென்னை மாநகராட்சி கடித எண்.......................... நாள் .................. இல் கிடைக்கப்பெற்ற திட்ட அனுமதி விண்ணப்பம்.~~

2(1) இதே எண் கொண்ட இவ்வலுவலக கடிதம் நாள் 10-10-2006

*****

3(2) அரசு ஆணை எண்.191 (வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை) நாள் 1-6-2007.

நில அளவை எண்.

உத்தேச கட்டிடத்திற்கு அனுமதி கொடுப்பது தொடர்பாக தங்களது விண்ணப்பம் பரிசீலனையில் உள்ளது. இவ்விண்ணப்பத்தை மேற்கொண்டு, பரிசீலிப்பதற்கு ~~கீழ்க்கண்ட கட்டணங்களுக்காக~~ ரசீது எண் 15803 நாள் 10-11-2006 இல் கீழ்கண்ட கட்டணங்களை செலுத்தியுள்ளீர்கள்.

| | | |
|---|---|---|
| 1. | நிலம் மற்றும் கட்டிட வளர்ச்சிக் கட்டணம் தமிழ்நாடு வளர்ச்சி மற்றும் ஊரமைப்புச் சட்டம் (1971இல் பிரிவு 59ன் கீழ்) | ரூ 64,000/- (ரூபாய் அறுபத்து நான்காயிரம் மட்டும்) |
| 2. | கூர்ந்தாய்வுக் கட்டணம் | ரூ 17,000/- (ரூபாய் பதினேழாயிரம் மட்டும்) |
| 3. | வரன்முறைக் கட்டணம் | — |
| 4. | திறந்தவெளிக் கட்டணம் ~~வளர்ச்சிக் கட்டுப்பாடு விதி~~ | — |
| 5. | காப்புறுதிக் கட்டணம் (உத்தேச வளர்ச்சிக்காக) | — |

குறிப்பு: (கட்டிடத்தை அனுமதி பெற்ற வரைபடத்தில் உள்ளவாறு கட்டி முடித்து முடிவுச் சான்றிதழுக்காக விண்ணப்பித்து, அது கொடுக்கப்பட்ட பிறகு இக்காப்புறுதிக் கட்டணம் வட்டியின்றி திருப்பியளிக்கப்படும். அனுமதி பெற்ற வரைபடத்திலிருந்த மாறுதல் / விதிமீறல் / உபயோக மாறுதல்கள் இருந்தால் காப்புறுதிக் கட்டணம் முழுமையாகப் பிடித்தம் செய்யப்படும்.

(2) பார்வை 2 இல் குறிப்பிட்டுள்ள அரசு ஆணையின் படி கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் கட்டணமாக ரூ12,69,000/- (ரூபாய் பன்னிரண்டு லட்சத்து அறுபத்தொன்பதாயிரம் மட்டும்) உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் என்ற பெயரில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் செலுத்தி அதன் நகல் ரசீதை இப்பிரிவில் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

3 ~~2.~~ இக் கடிதம் அனுப்பப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குப் பின் பணத்தைச் செலுத்தினால் அதற்கு ஆண்டிற்கு 12 % (மாதத்திற்கு 1%) வட்டி செலுத்த வேண்டும். இவ்வட்டி விகிதம் அனுப்பப்பட்ட நாளிற்குப் பிறகு முடிந்த ஒவ்வொரு மாதத்திற்கும் கணக்கிடப்படும். இவ்வட்டிப் பணத்தை இக்கட்டணங்களுடன் சேர்த்துக் கட்ட வேண்டும்.

4 ~~3.~~ இக்கடிதம் அனுப்பப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் பணத்தைச் செலுத்தாவிட்டால் இவ்விண்ணப்பம் அனுமதி தரப்படாமல் திருப்பி அனுப்பப்படும்.

5 ~~4.~~ கீழ்க்கண்டவற்றையும் நிறைவேற்றும்படி தாங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

i. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அறிவித்துள்ள மழைநீர் சேகரிப்பு முறையைத் தவறாது கடைப்பிடிக்க வேண்டும்.

ii. புதிய கட்டிடத்தில் கட்டப்படும் மேல்நிலை நீர்த் தொட்டிகளும், கிணறுகளும் கொசுக்களைத் தடுக்கும் விதத்தில் நன்றாக மூடப்பட்டிருக்க வேண்டும்.

iii. மேற்கண்ட நிபந்தனைகள் நிறைவேற்றப்படாவிட்டால் அனுமதி பெற்ற வரைபடம் செல்லாததாக கருதப்படும்.

5. நில உரிமையாளர்கள், பொது அதிகாரம் பெற்றவர்கள், கட்டிட முனைவோர்கள் அனைவரும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள வளர்ச்சிக் கட்டுப்பாடு விதியில் இணைப்பு 14–இல் கொடுக்கப்பட்டிருக்கும் படிவத்தில் உறுதிப் பத்திரம் கொடுக்க வேண்டும். அவ்வுறுதிப் பத்திரம் சான்றுறுதி அலுவலரால் கையெழுத்திடப்பட வேண்டும்.

~~6.~~

6 ~~7.~~ இக்கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றுவதைப் பொறுத்தும், கட்டணங்களைச் செலுத்துவதைப் பொறுத்தும் தான் திட்ட அனுமதி வழங்கும் நடவடிக்கை எடுக்கப்படும். விண்ணப்பதாரர் செலுத்திய கட்டணங்களைப் பெற்றுக் கொண்டதாலேயே திட்ட அனுமதி பெறும் உரிமையைப் பெற்றுவிட முடியாது. பிற நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் திட்ட அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் கட்டுமானத்தைத் தொடங்காமல் விண்ணப்பதாரர் பணத்தைக் கேட்டு விண்ணப்பித்தால் கூர்ந்தாய்வுக் கட்டணத்தைத் தவிர செலுத்தப்பட்ட வளர்ச்சிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் திருப்பித் தரப்படும்.

தங்கள் உண்மையுள்ள,

o/c [signature] 10/7/07

உறுப்பினர் செயலருக்காக.

க.சு.ஜெ
9/7/2007

நகல் :

ஏ.அ.ஜெ
10/7/07

1. முதுநிலைக் கணக்கு அதிகாரி,
கணக்குப் (பிரதான) பிரிவு,
செ.பெ.வ.குழுமம்,
சென்னை – 600 003.

2. ஆணையர், திரு வொற்றியூர் நகராட்சி,
~~சென்னை மாநகராட்சி,~~ சென்னை - 19.
~~சென்னை – 600 003~~.

3) செயல் அலுவலர்,
சின்ன சேக்காடு கிராம ஊராட்சி
சென்னை 68